<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

<u>அசல் வழக்கு எண்.</u> 24/2025

இன்று 2025 ம் ஆண்டு நவம்பர் 03 நாள் திங்கள் கிழமை இன்று இந்த வா.சா.4ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின்) திருமதி.A.சுபஸ்ரீ,L.L.M., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : அருணாச்சலம்

தந்தை பெயர் : பழனிசாமி

வயது :

தொழில் :

---

<u>முதல் விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.16 | எனது ஆதார் அடையாள அட்டை | அசலோடு ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது. |

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக</u>

1. திலகவாதி எனது மாமியார். எனது சொந்த ஊர் கரட்டாங்காடு, நான் 20.11.1980ல் திலவகதியின் மகளை திருமணம் செய்தேன். திருமணத்திற்கு பின்னிட்டு கரட்டாங்காட்டில் 15 ஆண்டுகள் இருந்தேன். அதன் பிறகு எனது

மாமியார் வீட்டிற்கு அருகே 2007 வரை இருந்தேன். பிரமாணவாக்குமூலத்தில் எனது முகவரியை தான் சொல்லியுள்ளேன். எனது மாமியாரின் முகவரியை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் வேறு விலாசத்தில் வசித்துக்கொண்டு மாமியார் வீட்டு முகவரியில் ஆதார் கார்டை வாங்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாமியார் வீட்டு கதவு எண் தெரியாது.

2. எனது ஆதார் கார்டில் கதவு எண் இல்லை. பிரமாணவாக்குமூலத்தில் கதவு எண் 43ல் வசிப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 43 எனது மாமியாரின் முகவரி என்றால் சரியல்ல, நான் வசிக்கும் வாடகைவீட்டின் முகவரி. ஜெலட்சுமிக்கும் எனது மைத்துனருக்கும் திருமணம் நடந்ததாக சொல்லியுள்ள சமையத்தில் ஆறுமுகத்தின் வயது என்ன என்றால் 37. திருமண ரசீதை தாக்கல் செய்துள்ளோம். அதில் ஆறுமுகம் ஜெயலச்சுமி பெயர் இல்லை என்றால் சரியல்ல. ரசீதை நான் பார்த்தேனா என்றால் பார்தேன். நான் சொல்வது தவறு என்றும் அதில் ஆறுமுகம் ஜெயலச்சுமி பெயர் இல்லை என்றால் சரியல்ல. ஜெயலச்சுமி திருமணம் சம்மந்தமாக அவரது பெற்றொரிடம் யார் பேசினோம் என்று விபரத்தை பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை.

3. பிரமாணவாக்குமூலத்தி படித்துபார்த்துதான் கையொப்பம் செய்தேன். அதனை வழக்கறிஞர் தான் தயார் செய்தார். ஆறுமுகம் 1995ம் ஆண்டு Studio வைத்தார். 1997ல் ஆறுமுகம் தேவியை திருமணம் செய்தார் என்றால் தேவியை தெரியாது. தேவியை திருமணம் செய்து, திருமணத்திற்கு பிறகு Studio மூலம் வளர்ச்சியடைத்துள்ளார்கள் என்றால் தேவியை பற்றியே தெரியாது. தேவிக்கும் ஆறுமுகத்திற்கும் திருமணம் நடந்த லாவண்யா பிறந்து அவருக்கும் திருமணம் நடந்து விட்டாது என்றால் தேவியை யார் என்றே

தெரியாது. ஆறுமுகத்தை யார் மருத்துவனையில் சேர்த்தார்கள் என்றால் Studio வில் ஆறுமுகத்திற்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தபோது அவரே ஆம்புலஸ்ற்கும் தேவிக்கும் போன் செய்து தேவி வந்து ஆம்புலஸ்சில் அழைத்து சென்றுள்ளார்கள். ஆறுமுகத்திற்கு முதன் முதலில் குடும்ப அட்டை எந்த முகவரில் வழங்கப்பட்டது என்றால் குமாரசாமி காலனி என்ற முகவரிக்கு வழங்கப்பட்டது. எந்த ஆண்டு என்று ஞாபகம் இல்லை.

4. ஆறுமுகத்தின் குடும்ப அட்டையில் வாதிகள் பெயர் இருந்தது. குடும்ப அட்டை எத்தனை வயதில் கொடுக்கிறார்கள் என்றால் மேஜர் ஆனவுடன் கொடுக்கிறார்கள். ஆறுமுகத்திற்கு முதன் முதலில் கருவம்பாளையம், முத்துசாமி வீதிக்கு தான் குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அதில் ஆறுமுகம், தேவி, லாவண்யா பெயர்தான் இருந்தது என்றால் அவர் இறந்ததற்கு பிறகு தான் தெரியும். மேற்படி விபரம் தெரிந்த பிறகுதான் அதனை மறைத்து எங்கள் வீட்டு முகவரியில் இரண்டாவது குடும்ப அட்டை வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. ஆறுமுகத்தின் அப்பா பெயரில் தான் வீடு உள்ளது.

5. அந்த சொத்திற்கு ஆறுமுகத்தின் மனைவியான தேவியும் மகளான லாசண்யாவும் வாரிசாக வந்துவிடுவார்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தேவி எந்த பொய் சாட்சியும் அளிக்கவில்லை என்றும் நான் தான் கதவு எண்ணை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

(4ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டார். )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.03 11:08:00 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.